


சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 207 20.1.2026 TUESDAY THAI : 6 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 207 20.1.2026 செவ்வாய்கிழமை தை : 6 விலை : ரூ.5/–

## அடுத்தடுத்து நிறைய, வரிசையாக

# “திறப்பு விழாக்கள் காத்திருக்கிறது”

## முதல்வர் ஸ்டாலின் சஸ்பென்ஸ்

சென்னை : ஜன.20-

தலைநகர் சென்னைக்காக திமுக அரசு எத்தனையோ திட்டங்களை செய்து கொடுத்து இருக்கிறது . அடுத்தடுத்து நிறைய , வரிசையாக திறப்பு விழாக்கள் காத்திருக்கிறது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்து உள்ளார்

செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு கடற்கரைச் சாலை நெம்மேலியில் ரூபாய் முந்நூற்று நாற்பத்து இரண்டு . ஆறு கோடியில் அமையவிருக்கும் மாமல்லன் நீர்த்தேக்கத்திற்கு முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார் . நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது : தமிழகத்தில் ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஏழாம் ஆண்டு முதல் இரண்டாயிரத்து பதினொன்றாம் ஆண்டு வரை திமுக ஆட்சியில் இருந்தபோது நாற்பத்து மூன்று அணைகள் கட்டப்பட்டுள்ளன

பொதுவாகவே பலருக்கு உண்மை தெரிந்தும் , சிலருக்கு உண்மை தெரியாமலும் திமுக ஆட்சியில் அணைகளே கட்டப்படவில்லை என்று பெரிய பொய்யை கூறுவார்கள் . ஆனால்



உண்மை என்னவென்றால் கருணாநிதி தமிழகத்தின் நீர்நிலைகளை காப்பதற்கு தேவையான அனைத்தையும் செய்திருக்கிறார்

முக்கியம் . ஒரு நாட்டிற்கு நிதி மேலாண்மை போலவே , இப்பொழுது நீர் மேலாண்மையும் மிக மிக முக்கியம் . அந்த நீர் மேலாண்மைக்கு மிக மிக அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் உணர்ந்து திமுக அரசு செயல்படுகிறது . நீர் நிலைகளை மாசுபடாமல் காத்து வருகிறோம் . நிலத்தடி நீரை அதிகரிக்க எல்லா முயற்சிகளும் எடுத்து வருகிறோம்

கடல்நீரை குடிநீர் ஆக்கவும் முயற்சி செய்கிறோம் . அரசு என்ன தான் ஒரு பக்கம் நடவடிக்கை எடுத்தாலும் , மக்களுக்கும் இதில் கடமை இருக்கிறது . அதனால் தான் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் சிறப்பாக செயல்பட கூடியவர்களுக்கு விருதுகளை தொடர்ந்து வழங்கி கொண்டு இருக்கிறோம் . மிகுந்த மகிழ்ச்சி . நீர்வளத்துறை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் இருக்க கூடிய கால்வாய்கள் மற்றும் நீர் நிலைகளை சுத்தப்படுத்தி பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் நீண்ட கால பலன்களை பெறக்கூடிய வகையில் , நிலையான நீர் மேலாண்மைகளை உறுதி செய்யக்கூடிய அரசு தன்னார்வல தொண்டு நிறுவனங்களை பாராட்டி இன்றைக்கு விருது வழங்கியதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்

தலைநகர் சென்னைக்காக திமுக அரசு எத்தனையோ திட்டங்களை செய்து கொடுத்து இருக்கிறது . அடுத்தடுத்து நிறைய , வரிசையாக திறப்பு விழாக்கள் காத்திருக்கிறது . இன்றைக்கு நான் தொடங்கிய நீர் தேக்க பணி மக்களுக்கு வாழ்வளிக்க போகிறது . இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்



■ திமுக மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளரும், சிவகாசி சட்டமன்றத் தேர்தல் பொறுப்பாளருமான சிவகிரியைச் சேர்ந்த டாக்டர் எஸ்.எஸ். செண்பகவிநாயகம் தனது பிறந்தநாளை முன்னிட்டு, விருதுநகர் மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழக துணை முதல்வரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



## திமுக சார்பாக அமைச்சர் ஐ.பெரியசாமி பிறந்த நாள், திராவிடப் பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள்

சின்னாளபட்டி, ஜன. 19

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் திமுக சார்பாக கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிடப் பொங்கல் விழாவை முன்னிட்டு அப்பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பெண்களுக்கான அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றது. வெற்றி பெற்வர்களுக்கான பரிசு வழங்கும் விழா பிள்ளையார்நத்தம் மகாமுத்துமாரியம்மன் கோவில் திடலில் நடைபெற்றது. விழாவிற்;கு ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் தலைமை தாங்கினார். முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், சின்னாளபட்டி பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா, பிள்ளையார்நத்தம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் உலகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிள்ளையார்நத்தம் மில்மேடு கிளைச் செயலாளர் அருண்பாண்டியன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி கலந்து கொண்டு பொதுமக்கள் மத்தியில் பேசும்போது இந்தியாவில் பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களில் எல்லாம் வறுமை தலைவிரித்து ஆடுகிறது. அதனால்தான் வடமாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், இளைஞர்கள் பிழைப்புத்தேடி தமிழகத்திற்கு வருகிறார்கள். காரணம் வேலைவாய்ப்பும், பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக தமிழகம் உள்ளது என்றார். இன்று நாம் எழுச்சியுடன் திராவிடப் பொங்கலை கொண்டாடி மகிழ்கின்றோம் என்றால், அதற்கு காரணம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களே என்றார்.

அதன் பின்னர் கால்பந்தாட்டப் போட்டியில் முதல் பரிசைப் பெற்ற திண்டுக்கல் சுந்தரம் நினைவு அணிக்கு ரூ. 15 ஆயிரம் மற்றும் பரிசுக்கோப்பையையும், 2ம் பரிசைப் பெற்ற காந்திகிராமம் பல்கலைக்கழக அணிக்கு ரூ.9001 மற்றும் பரிசுக்கோப்பையும், 3ம் பரிசை பெற்ற அனுமந்தராயன்கோட்டை லொயாலா அணிக்கு ரூ.6,001 மற்றும் பரிசுக்கோப்பை வழங்கி வாழ்த்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் செல்வராணி , பிள்ளையார்நத்தம் கிளைச் செயலாளர் கண்ணன், நிர்வாகிகள் மனோகரன், ராஜசேகரன், பிள்ளையார்நத்தம் மாணவரணி அமைப்பாளர் அருண் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் மாற்றுக் கட்சியினர் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்

சின்னாளபட்டி, ஜன.20

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த அ.ம.மு.க ஒன்றிய செயலாளர் கிறிஸ்துராஜா தலைமையில் ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய அவைத்தலைவர் அருள்ஞான அந்தோணி, ஒன்றிய பொருளாளர் ராமராஜ் மற்றும் கிளைச் செயலாளர்கள் 10 பேர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து, சால்வை அணிவித்து தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். இதுபோல ஆத்தூர் தெற்கு ஒன்றிய அக்கரைப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த த.வெ.க. தொண்டர்கள் 50 பேர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வினோத் தலைமையில், அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து அவருக்கு சால்வை அணிவித்து திமுகவில் இணைந்தனர். திமுகவில் இணைந்தவர்களுக்கு கட்சியின் சின்னம் பொறித்த ஆடைகளை அணிவித்து வாழ்த்திப் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், இன்று மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் திமுகவில் இணைகிறார்கள் என்றால், அதற்கு கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்



தமிழகத்தில் செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களே என்றார்.

நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், நெடுஞ்செழியன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழ உறுப்பினர்கள் அக்பர், கலைராஜன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணிவட்ட இளைஞர் இளைஞர்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அருன் ஜெகநாதன் மற்றும் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன் பஞ்சம்பட்டி மணி ரெட்டியார்சத்திரம் பாலன் ,ரெட்டியார்சத்திரம் ஒன்றிய துணைச் செயலாளர் சுமதி கணேசன் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் ,கணேசன் வாஞ்சிநாதன், ஆத்தூர் தெற்கு ஒன்றி இளைஞரணி துணை அமைப்பாளர் முத்து, திமுக நிர்வாகி டாஸ்மாக் விவேக், அக்கரைப்பட்டி ஊராட்சி செயலாளர் நடராஜன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், சிறுபான்மை யினர் அணியைச் சேர்ந்த முஜீப் மற்றும் இளைஞரணியினர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## சங்கரன்கோவில் ஈச்சந்தாவில் தை அமாவாசை சிறப்பு நிகழ்ச்சி

தென்காசி, ஜன.20-

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், ஈச்சந்தாவில் அருள் புரியும் ஸ்ரீ சங்கர கோமதி சமேத சங்கரலிங்க சுவாமி கோவிலில் தை அமாவாசை சிறப்பு பூஜைகள், அன்னதானம் 100 மேற்பட்ட பக்தர்களுக்கு உணவருந்தி சுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும், இந்த பூஜையை சிறப்பித்தவர்கள் ஷூி.பாலசுப்பிரமணியன், முருகன் வி.ஏ.ஓ., புதல்வி சென்னை ராஜி திவ்யா அவர்களுக்கு அருள்மிகு சங்கர விநாயகர் திருக்கோவில் அறக்கட்டளை நிர்வாகம் சார்பாக இந்நிகழ்ச்சினை சிறப்பாக நடத்தியத்திற்கு நன்றியினை தெரிவித்துள்ளனர்.





# கிலோ ரூ.380 வரை விற்பனை: தமிழகத்தில் கோழி இறைச்சி விலை உயர்வு ஏன்?



சென்னை, ஜன.20-
கடந்த சில நாட்களாக கோழி இறைச்சியின் விலை பல மடங்கு உயர்ந்திருப்பதால், அசைவ பிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பெரும்பாலான நடுத்தர குடும்பங்களின் இறைச்சி புரதத் தேவையை, ஈடுகட்டுபவையாக கோழி இறைச்சி இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் கடந்த ந்த சில மாதங்களாக ஒரு கிலோ கோழி இறைச்சி ரூ.200 என்ற விலையில் இருந்து வந்தது. தற்போது பல மடங்கு அதிகரித்து ரூ.380 வரை எட்டியுள்ளது.

கோழித் தீ தீவனத்தின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் விலையேற்றம் என கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில், அதிகப்படியான இந்த விலையேற்றத்தால், பலரும் இறைச்சியை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உணவகங்களும், அசைவ உணவுகளை விலையேற்றி உள்ளனர். இறைச்சி விற்பனையில் ஈடுபட்டுள்ள கடைக்காரர்கள் கூறும்போது. "கறிக் கோழி பண்ணை விவசாயிகள் கோழிக் குஞ்சுகளை வளர்க்க கூலியாக ரூ.6.50 மட்டும் வழங்குவதை கண்டிக்கும். ரூ.20 வழங்க வலியுறுத்தியும் கடந்த 1ம் தேதி முதல் போராட்டத்தை தொடங்கியிருப்பதால், இந்த விலையேற்றம் என்று சொல்லப்படுகிறது.

இறைச்சி விற்பனை கடைகளில் கோழி இறைச்சி ரூ.320 முதல் ரூ. 360 வரை விற்கப்படுகிறது. தோல் நீக்கிய கோழி இறைச்சி சில இடங்களில் ரூ.380 வரை விற்கப்படுகிறது.

அதேபோல் இந்த விலையேற்றத்தின் காரணமாக மீன் வாங்கி பயன்படுத்தலாம் என நினைத்தால் மத்தி, கட்லா, பாறை உள்ளிட்ட சில ரகங்கள் மட்டுமே விலை குறைந்த நிலையில் உள்ளன. எஞ்சிய ரக மீன்கள் அதிக விலைக்கு விற்கப் படுவதால், மீன் வாங்கவும் பலரும் விருப்பம் காட்டவில்லை.

மேலும் நேற்றைய தினம் தை அமாவாசை என்பதால் இறைச்சி கடைகளில் கூட்டம் இல்லை. இனி வரும் நாட்களில் இறைச்சியின் விலை அதிகரிக்கும் நிலை இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் இறைச்சி நுகர்வோர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அதேபோல் இந்த விலையேற்றத்தின் காரணமாக பொதுமக்களின் நுகர்வும் குறையும். இது வியாபாரிகளுக்கும் பாதிப்பே'' என்றனர்.

# தமிழகம் முழுவதும் 35 ரயில்களுக்கு கூடுதல் நிறுத்தம் விரைவில் வெளியாகிறது அறிவிப்பு



சென்னை, ஜன.20-
தமிழகம் முழுவதும் 35 ரயில்களுக்குக் கூடுதல் நிறுத்தங்கள் அளிக்க இந்திய ரயில்வே உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது. தெற்கு ரயில்வேயில் முக்கிய வழித்தடங்களில் ஓடும் விரைவு ரயில்கள், பாசஞ்சர் ரயில்களுக்கு பயணிகளின் தேவை அடிப்படையில் கூடுதல் நிறுத்தங்களை வழங்க பயணிகள், சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதற்கிடையில் 29 விரைவு ரயில்களுக்கும், 6 பாசஞ்சர் ரயில்களுக்கும் கூடுதல் நிறுத்தங்களை வழங்க ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

சென்னை கோயம்புத்தூர் கோவை விரைவு ரயில், சென்னை பெங்களூரு டபுள் டெக்கர் ரயில் ஆகிய ரயில்களுக்கு திருவள்ளூர் நிலையத்தில் நிறுத்தம் வழங்கப்படவுள்ளது.

சென்னை ஜோலார் பேட்டை விரைவு ரயில் இனி அம்பத்தூரில் நின்று செல்லும். அதே நேரம் சென்னை எழும்பூர் சத்ரபதி சிவாஜி மகாராஜ் டெர்மினஸ் விரைவு ரயிலுக்கு அரக்கோணத்தில் நிறுத்தம் வழங்கப்படவுள்ளது.

மங்களூர் சென்னை சென்ட்ரல் விரைவு ரயில், திருவனந்தபுரம் சென்னை சென்ட்ரல், அகமதாபாத் சென்னை சென்ட்ரல், புதுச்சேரி காச்சிகுடா, செங்கல்பட்டு காச்சிகுடா உள்ளிட்ட ரயில்களுக்கு பெரம்பூரில் நிறுத்தம் வழங்கப்படவுள்ளன.

நிறுத்தம் வழங்கப்படவுள்ள 29 விரைவு ரயில்களில் மெயில், அதிவிரைவு, அந்த்யோதயா ரயில் ஆகியவை அடங்கும். இதுதவிர சென்னை மும்பை, சென்னை விஜயவாடா, பெங்களூரு கன்னியாகுமரி போன்ற நீண்ட தூர மாநிலங்களுக்கு இடையேயான ரயில் சேவைகளும் அடங்கும். இதுதவிர, மெட்ரோ ரயில் இணைப்பு உள்ள விம்கோ நகரில் சென்னை விஜயவாடா பினாகினி விரைவு ரயில், விஜயவாடா ஜன சதாப்தி விரைவு ரயில் மற்றும் பித்ரகுண்டா சென்னை சென்ட்ரல் பயணிகள் ரயில் ஆகியவற்றுக்கு நிறுத்தம் வழங்குவதும் அடங்கும். சென்னை எழும்பூர் கன்னியாகுமரி விரைவு ரயிலுக்கு கோவில்பட்டியில் நிறுத்தம் வழங்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கை மூலமாக, சென்னை சென்ட்ரல், எழும்பூர் ஆகிய ரயில் நிலையங்களில் ஏற்படும் நெரிசல் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுதவிர, பயணிகள் முக்கிய ரயில் முனையங்களுக்குப் பயணிக்காமலேயே நீண்ட தூர ரயில்களை எளிதாக பிடிப்பதற்கு உதவும்.

இதுகுறித்து ரயில்வே அதிகாரி ஒருவர் கூறுகையில், "இந்த புதிய நிறுத்தங்கள் அமல்படுத்தப்படும் தேதி விரைவில் அறிவிக்கப்படும்'' என்று தெரிவித்தார்.

# "திமுக கண் துடைப்புக்காக ஆம்னி பேருந்து கட்டண உயர்வை எச்சரிக்கிறது" நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜன.20-
"பொங்கல், தீபாவளி என அனைத்துப் பண்டிகைக் காலங்களிலும், ஆம்னி பேருந்துக் கட்டணம் விண்ணைத் தொடுவதும், தென்மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு அரசு பேருந்துகள் குறைவாக இயக்கப்படுவதும், கண் துடைப்புக்காக திமுக அமைச்சர்கள் ஆம்னி கட்டண உயர்வை எச்சரிப்பதும் தொடர்கதையாகி வருகிறதே தவிர, மக்களின் பணம் சுரண்டப்படுவது நின்றபாடில்லை'' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நேற்று நெல்லையில் இருந்து சென்னை வருவதற்கான ஆம்னி பேருந்தில் ஒரு நபருக்கு ரூ.7,500 வரை கட்டணம் வசூலிக்கப்பட்டதாக வெளிவந்துள்ள தகவல் மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

பொங்கல், தீபாவளி என அனைத்துப் பண்டிகைக் காலங்களிலும், ஆம்னி பேருந்துக் கட்டணம் விண்ணைத் தொடுவதும், தென்மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு அரசு பேருந்துகள் குறைவாக இயக்கப்படுவதும், கண் துடைப்புக்காக திமுக அமைச்சர்கள் ஆம்னி கட்டண உயர்வை எச்சரிப்பதும் தொடர்கதையாகி வருகிறதே தவிர, மக்களின் பணம் சுரண்டப்படுவது நின்றபாடில்லை.

பண்டிகை தினத்தன்று தன் சொந்த ஊருக்குச் சென்றுவிட்டுத் திரும்ப நினைக்கும் ஒரு குடும்பத்தின் மாதச் சம்பளத்தை ஆம்னி பேருந்துக் கட்டணம் மூலம் பறித்துவிட்டு வேடிக்கை பார்க்கும் திமுக அரசை, நடுத்தர வர்க்க மக்களின் வயிற்றெரிச்சலே விரைவில் வீழ்த்தும்'' என்று தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

# டெல்லி: நைஜீரிய கும்பலிடம் ரூ.5 கோடி போதைப் பொருள் பறிமுதல்



புதுடெல்லி, ஜன.20-
போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக ரகசிய தகவலின் அடிப்படையில் தெற்கு டெல்லி பகுதியில் போலீஸார் திடீர் சோதனை நடத்தி பிராங்க் விடஸ் உமே என்ற நைஜீரிய இளைஞரை கைது செய்தனர்.

அவரது வீட்டில் சோதனை நடத்திய போது கோகைன் மற்றும் எம்டிஎம்ஏ போதைப் பொருள் மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. அதன்பிறகு நைஜீரியாவைச் சேர்ந்த சண்டே ஒட்டு என்பவர் மெஹ்ராலி பகுதியில் கைது செய்யப்பட்டார்.

இவரது வீட்டிலும் எம்டிஎம்ஏ மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மதிப்பு சுமார் ரூ.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கடத்தல் கும்பலில் தொடர்புடைய மற்றவர்களை கைது செய்ய மேலும் விசாரணை நடைபெறுகிறது.



# திருப்பூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 310 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது

திருப்பூர், ஜன.20-
திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், திருப்பூர் மாவட்ட ஆட்சியரக

அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர்

அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது. அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 310 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே அறிவுறுத்தினார்.இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள்(பொது) மகாராஜ், (நிலம்) மலர், (வேளாண்மை) ஷீலா பூசலெட்சுமி மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு, புதுச்சேரியில் வடகிழக்கு பருவமழை விடைபெற்றது

## இந்திய வானிலை மையம் தகவல்

டெல்லி, ஜன.20-
வடகிழக்கு பருவமழை தென்னிந்தியாவில் இருந்து விலகியதாக வானிலை மையம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரியில் வடகிழக்கு பருவமழை விடைபெற்றது என இந்திய வானிலை மையம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் கடந்த அக்டோபர் 16ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது.

# நெம்மேலியில் ரூ.360 கோடியில் நீர்த்தேக்கம் அமைக்க மீனவர்கள் எதிர்ப்பு



திருப்போரூர், ஜன.20-
செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் ரூ.360 கோடியில் நீர்த்தேக்க திட்டத்திற்கு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மாமல்லபுரம் சாலை ஆகியவற்றுக்கு இடையே முட்டுக்காடு முகத்துவாரத்தில் இருந்து மாமல்லபுரம் வரை 3,010 ஏக்கர் பரப்பளவில் ரூ.360 கோடியில் 1.6 டிஎம்சி வெள்ள நீரை சேமிக்கும் வகையில், மாமல்லன் நீர்த்தேக்கம் அமைய உள்ளது. இந்த நீர்த்தேக்கத்திற்கான அடிக்கல் நாட்டு விழா, இன்று (19ம் தேதி) மாமல்லபுரம் அருகே நெம்மேலியில் நடைபெற உள்ளது.

இதற்கிடையே, உப்புநீர் சூழ்ந்த பகுதி மற்றும் பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றை மாற்றி அமைப்பதால் மீன்களின் இனப்பெருக்கம் தடுக்கப்படும். இயற்கை சூழல் மாற்றம் ஏற்பட்டு பாதிப்பு ஏற்படும்.கோவளம் முதல் கொக்கில மேடு வரை (35 கி.மீ.) இத்திட்டத்தை செயல்படுத்தும் போது, மீன்பிடித் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படும்.

மழை, புயல், வெள்ளம் காலங்களில் கடலுக்கு மீன் பிடிக்க செல்லாத போது, இந்த உபவடி நில பரப்பில் இறால், நண்டு மற்றும் மீன் ஆகியவற்றை பிடித்து பிழைப்பை நடத்தி வருவதால் இத்திட்டத்தினை மறுபரிசீலனை செய்ய கோரி, பல்வேறு மீனவர் அமைப்புகள் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்நிலையில், மீனவர் அமைப்பு பிரதிநிதிகளுடன் சமாதானக் கூட்டம் நேற்று திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தி.சினேகா தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துக் கொண்டார். முன்னதாக, இந்த கூட்டத்தில் நீர்வளத்துறை அதிகாரிகள், படக்காட்சிகள் மூலம் நீர்த்தேக்கம் அமைய உள்ள இடம், பரப்பளவு குறித்து மீனவர்களுக்கு விளக்கினர். 18 மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் கலந்துக் கொண்டு தங்களின் நிலைப்பாடு குறித்து பேசினார். மீனவர்களின் வாழ்வாதாரம் எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்றும், இந்த திட்டத்திற்கும், கடல் மீன்களுக்கும் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது என்றும் மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமைச்சர் உறுதி: பின்னர் பேசிய அமைச்சர் தா.மோ.அன்பரசன், மீனவர்களின் கருத்துகள் முதல்வர் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு உரிய தீர்வு காணப்படும். இந்த திட்டத்தால் சுற்றுப்புற கிராமங்களின் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதோடு, மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைக்கு பாதிப்பு ஏற்படாமல், அவர்களுக்கு உரிய அனுமதி வழங்கப்படும். படகுகளை நிறுத்திக் கொள்ள இடம் வழங்கப்படும் என்றும் உறுதி அளித்தார்.

# திருமணம் செய்துகொள்ளும் பிரச்சினையில் காதலன் வீட்டில் பிசியோதெரபி மாணவி தற்கொலை

சென்னை, ஜன.20-
காதலன் வீட்டில் பிசியோதெரபி மாணவி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை சூளைமேடு, வன்னியர் தெருவைச் சேர்ந்தவர் ஹரிஷ் குமார் (26). மருந்து விற்பனை பிரதிநிதியாக பணியாற்றி வருகிறார். இவரும் நுங்கம்பாக்கம் புஷ்பா நகரைச் சேர்ந்த பூஜா (24) என்ற பெண்ணும் கடந்த 9 ஆண்டுகளாக காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. பூஜா தனியார் கல்லூரி ஒன்றில் பிசியோதெரபி படித்து வந்தார். அடிக்கடி காதலன் வீட்டுக்கு சென்று வருவதை அவர் வழக்கமாக வைத்திருந்தாக கூறப்படுகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினமும் ஹரிஷ் குமார் வீட்டுக்கு பூஜா சென்றுள்ளார். அப்போது திருமணம் செய்துகொள்வது தொடர்பாக இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் வேதனை அடைந்த பூஜா, ஹரிஷ் குமார் வீட்டின் அறை ஒன்றுக்கு சென்றுள்ளார். பின்னர் நீண்ட நேரமாகியும் வெளியே வராததால் சந்தேகம் அடைந்த, ஹரிஷ் குமார் ஜன்னல் வழியாக பார்த்தபோது, பூஜா தூக்கில் தொங்கியது தெரியவந்தது.

உடனடியாக அவர் கதவை உடைத்து உள்ளே சென்று, மாணவியை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். பரிசோதித்த மருத்துவர்கள் பூஜா ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். தகவல் அறிந்து சூளைமேடு போலீஸார் சம்பவ இடம் விரைந்து விசாரித்தனர். மேலும், திருமண விவகாரம் தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பூஜா தற்கொலை செய்து கொண்டாரா அல்லது ஹரிஷ் குமார் தாக்கி உயிரிழந்தாரா என போலீஸார் விசாரிக்கின்றனர்.



# கூத்தன் குழியில் தூண்டில் வளைவு அமைத்து தரக் கோரி 200க்கும் மேற்பட்ட மீனவர்கள் அதிகாலை போராட்டம்

நெல்லை, ஜன.20-
நெல்லை மாவட்டம் கூத்தன் குழியில் தூண்டில் வளைவு அமைத்து தரக் கோரி 200க்கும் மேற்பட்ட மீனவர்கள் மற்றும் கிராம மக்கள் அதிகாலையிலேயே கடற்கரை வழியாக கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். மீனவர்களும் இன்று கடலுக்கு மீன் பிடிக்க செல்லாமல் 300க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகளை கடற்கரை ஓரத்தில் நிறுத்தி வைத்துள்ளனர்.

# 'பராசக்தி' படத்தில் வரும் செழியன் நான்தான் சீமான்





சென்னை, ஜன.20-
"'பராசக்தி' படத்தில் வரும் செழியன் நான்தான். தமிழ் வாழ்க என சிவகார்த்திகேயன் கத்துவதைப் பார்க்கும்போது, நானே கத்தியது போல இருந்தது'' என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான 'பராசக்தி' படத்தைப் பார்த்த பிறகு நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேட்டியளித்தார். அப்போது பேசிய அவர், "தமிழ் வாழ்க என சிவகார்த்திகேயன் கத்துவதைப் பார்க்கும்போது, நானே கத்தியது போல இருந்தது. 'பராசக்தி' படத்தில் வரும் செழியன் நான்தான்.

ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் மொழி முக்கியம். விரும்பினால் எந்த மொழியையும் கற்போம். தேவை என்றால் நிச்சயம் வேறு மொழிகளை கற்போம். ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள அதிகபட்சமாக ஆறு முதல் ஏழு மாதங்கள் ஆகும். தேவை ஏற்படும்போது அதை கற்கத் தானே போகிறோம்.

அதை விட்டுவிட்டு ஒரு மொழியைக் கட்டாயம் படிக்க வேண்டும் எனச் சொல்வதை நிச்சயம் ஏற்க முடியாது. அது சரியாகவும் இருக்காது. அனைத்து மொழிகளையும் மதிக்க வேண்டும். வலுக்கட்டாயமாக இந்தி திணிப்பைச் செய்யக்கூடாது என்பதற்கு கேரளா, வங்காளம் என அனைத்து மாநிலங்களிலும் இருந்து எதிர்ப்பு இருந்ததாகவே இந்தப் படம் சொல்கிறது. இறுதியாக ஒரு படம் முடியும் தருவாயில் 'தமிழ் வாழ்க' என வருகின்றதென்றால் அதை பாராட்டியாக வேண்டும்.

மொழிப் போராட்ட உணர்வை எடுத்துக்கொண்டு திரைக்கதையைக் கற்பனையாக உருவாக்கியுள்ளனர். 'பராசக்தி' படத்தை பெண் இயக்குநர் நன்றாக இயக்கியுள்ளார். அவர் இயக்கிய மூன்று படங்களையும் பார்த்துள்ளேன். இது ஒரு பெரிய முயற்சி.

படத்தில் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா என அனைவரும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். ஜி.வி பிரகாஷின் பின்னணி இசை, பாடல் மிகச் சிறப்பாக இருந்துள்ளது. மொத்தத்தில் 'பராசக்தி' ஒரு நல்ல படமாக வெளிவந்துள்ளது. ஒளிப்பதிவும் நன்றாக உள்ளது. ஆனால் அவர்கள் மொழிப் போரை அப்படியே காட்டவில்லை. இது நமது மொழிப்போர் வரலாறும் இல்லை. அதேநேரம் அப்படம் மொழி உணர்வைச் சிதைக்கவும் இல்லை'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஸ்பெயினில் இரண்டு ரயில்கள் மோதி பயங்கர விபத்து: 21 பேர் உயிரிழப்பு!



அடாமுஸ், ஜன.20-

தெற்கு ஸ்பெயினில் உள்ள அடாமுஸ் நகரத்துக்கு அருகே நேற்று (ஞாயிறு) மாலை இரண்டு ரயில்கள் மோதிக்கொண்ட விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர், சுமார் 100 பேர் காயமடைந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை மாலை தெற்கு ஸ்பெயினில் இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டதில் 21 பேர் உயிரிழந்தனர், 100 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ், இது நாட்டுக்கு ஆழ்ந்த வேதனை நிறைந்த இரவு என்று கூறினார்.

மலகாவிலிருந்து மாட்ரிட் நோக்கிச் சென்ற ஜரியோ அதிவேக ரயில் அடாமுஸ் அருகே தடம் மாறி மற்றொரு தண்டவாளத்துக்குள் நுழைந்தது. அந்த ரயில் மோதியதில், எதிரே வந்த ரயில் தடம் புரண்டது என்று ஸ்பெயினின் அடிஃப் ரயில் சேவை நிறுவனம் தெரிவித்தது.

நேற்று மாலை 6.40 மணிக்கு (17.40 நிவிஜி) மலகாவிலிருந்து ஜரியோ ரயில் புறப்பட்ட சுமார் 10 நிமிடங்களுக்குப் பிறகு இந்த விபத்து நடந்துள்ளது. இந்த விபத்தில் 21 பேர் உயிரிழந்ததாகவும், இந்த எண்ணிக்கை உயரக்கூடும் என்றும் ஸ்பெயின் நாட்டின் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆஸ்கார் புயன்டே கூறினார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 100 பேரில், 25 பேர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக அண்டலூசியா மாகாண தலைவர் ஜுவான்மா மோரேனோ தெரிவித்தார்.

"விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. நேராகச் செல்லும் தண்டவாளப் பாதையில் ரயில் தடம் புரண்டது உண்மையிலேயே விசித்திரமானது. இந்தத் தண்டவாளம் மே மாதத்தில் புதுப்பிக்கப்பட்டது" என்று ஸ்பெயினின் போக்குவரத்துத் துறை அமைச்சர் புவென்டே கூறினார்.

இந்த விபத்தினை தொடர்ந்து மாட்ரிட் மற்றும் அண்டலூசியாவிற்கு இடையிலான அனைத்து ரயில் சேவைகளையும் அடிஃப் நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளது.




# குடியரசு தின கொண்டாட்டத்தை முன்னிட்டு மெரினா காமராஜர் சாலையில் முப்படைகளின் அணிவகுப்பு ஒத்திகை

சென்னை, ஜன.20-

குடியரசு தினத்தை முன்னிட்டு மெரினா காமராஜர் சாலையில் முப்படை வீரர்களின் அணிவகுப்புடன் முதல் நாள் ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடந்தது. நாட்டின் குடியரசு தின விழா வரும் 26ம் தேதி திங்கள்கிழமை நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி சென்னை மெரினா காமராஜர் சாலையில் உள்ள உழைப்பாளர் சிலை அருகே குடியரசு தின விழாவுக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை சார்பில் செய்யப்பட்டு வருகிறது. குடியரசு தினத்தன்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தேசிய கொடியை ஏற்றுகிறார். பிறகு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை மற்றும் தமிழ்நாடு அரசின் துறைகள் சார்ந்த வாகனங்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.

இதற்கான முதற்கட்ட பாதுகாப்பு ஒத்திகை இன்று காலை 7 மணிக்கு நடந்தது. இந்த ஒத்திகை நிகழ்ச்சியில் முப்படைகளான ராணுவம், கடற்படை, வான்படை வீரர்கள் மற்றும் தேசிய மாணவர் படை, மத்திய தொழில் பாதுகாப்பு படை, ஆர்.பி.எப் வீரர்கள், காவல் துறையினர், தீயணைப்பு வீரர்களின் அணிவகுப்பு நடந்தது. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் கண்கவரும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஆடல் பாடல்களுடன் நடந்தது. இந்த ஒத்திகை நிகழ்ச்சியை முன்னிட்டு மெரினா காமராஜர் சாலை முதல் போர் நினைவு சின்னம் வரையிலான சாலையில் காலை 6 மணி முதல் நிகழ்ச்சி முடியும் வரை போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது.

# தேர்தலில் ஓட்டு வாங்குவதற்காக எதை வேண்டுமானாலும் சொல்வதா: எடப்பாடிக்கு ராமதாஸ் சூடு



திண்டிவனம், ஜன.20-

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த தைலாபுரம் இல்லத்தில் பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தலைமையில் நிர்வாக குழு கூட்டம் நேற்று மாலை நடந்தது. பின்னர் ராமதாஸ் கூறியதாவது: டெல்லி உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தெரிவித்த கருத்தின்படியும், நீதிமன்ற தீர்ப்பின்படியும் அன்புமணி பாமக தலைவர் என்று சொல்ல முடியாது, சொல்லக்கூடாது. பாமகவிலிருந்து அடிப்படை உறுப்பினராக இருக்கக்கூடாது என்று செயற்குழு, பொதுக்குழு நிர்வாக குழு சொல்லிய பிறகும் அன்புமணி பாமகவின் தலைவர் என்று சொல்லித் திரிகிறார். இது நீதிமன்ற அவமதிப்பு செயலாகும். டெல்லி நீதிமன்றம் தீர்ப்பின்படி பாமகவின் சின்னம், கொடி, பெயர் இதனை அன்புமணி உபயோகப்படுத்தக்கூடாது. அப்படி உபயோகப்படுத்தினால் அது நீதிமன்ற அவமதிப்பு செயலாகும்.

தேர்தல் கூட்டணி குறித்து சீக்கிரமே ஒரு நல்ல முடிவை உங்களுக்கு அறிவிப்போம். பாமக அமைக்கும் கூட்டணி மிகப்பெரிய வெற்றி கூட்டணியாக அமையும். அப்படிப்பட்ட கூட்டணியை அமைக்க தீவிரமாக முயன்று வருகிறோம் என்றார். எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ள தேர்தல் வாக்குறுதி குறித்து அவரிடம் கேட்டபோது, "தேர்தலில் எப்படியாவது ஓட்டு வாங்குவதற்காக எதை வேண்டுமானாலும் சொல்லலாம். இதனை மக்கள் தான் தீர்மானிப்பவர்கள். மக்கள் தான் எஜமானர்கள். மக்கள் என்ன நினைக்கிறார்களோ அவர்கள், சரியாக வாக்களிப்பார்கள்" என்றார்.

# மதுரையில் இருந்து சென்னை செல்ல ஆம்னி பேருந்துகளில் ரூ.3,000 கட்டணம் பயணிகள் அவதி



சென்னை, ஜன.20-

மதுரையிலிருந்து சென்னைக்கு செல்ல ஆம்னி பேருந்துகளில் ரூ.3,000 வரை கட்டணம் வசூலிக்கப்பட்டதால் பயணிகள் அதிருப்தி அடைந்தனர்.பொங்கல் பண்டிகையை கொண்டாட பல்வேறு நகரங்களிலிருந்து மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கு குடும்பத்துடன் வந்தவர்கள் விடுமுறை முடிந்த நிலையில் நேற்று ஊர்களுக்கு திரும்பினர். இதனால் மாட்டுத்தாவணி, ஆரப்பாளையம் பேருந்து நிலையங்களில் பயணிகள் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது.சென்னை, கோவை, திருப்பூர் உள்ளிட்ட நகரங்களுக்கும், தென் மாவட்டங்களுக்கும் வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் 250 க்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டன. பேருந்து நிலையங்களில் சிறப்பு கவுன்ட்டர்கள் அமைக்கப்பட்டு, சிறப்பு பேருந்துகளில் பயணிப்பவர்களுக்கு டிக்கெட் வழங்கப்பட்டது. அதிகாரிகள் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவதை கண்காணித்தனர்.இதேபோல் மதுரையில் இருந்தும், மதுரை வழியாக இயக்கப்பட்ட அனைத்து ரயில்களிலும் பயணிகள் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது. மதுரை ரயில் நிலையத்திலும் பயணிகள் அதிகம் இருந்தனர். முன்பதிவு இல்லாத பெட்டிகளில் பயணிகளை வரிசையில் நிறுத்தி போலீஸார் ஏற்றி விட்டனர்.ஆம்னி பேருந்து: ஆம்னி பேருந்துகளில் சென்னைக்கு வழக்கமான நாட்களில் ரூ.700 முதல் ரூ.1,000 வரையும், பண்டிகை நாட்களில் ரூ.2,000 வரையும் வசூலிக்கப்படுவது வழக்கம். நேற்று வழக்கத்தை விட கூடுதலாக ரூ.3 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்பட்டது. சில பேருந்துகளில் ரூ.6 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்பட்டதாக பயணிகள் தெரிவித் தனர். ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதை தடுக்க வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என பயணிகள் குற்றம்சாட்டினர்.

வேன்களில் பயணம்: கோவைக்குச் செல்லும் பேருந்துகள் ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படுகிறது. மதுரையிலிருந்து கோவைக்கு அரசு பேருந்தில் ரூ.200 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இந்நிலையில், கூட்டம் அதிகமாக இருப்பதை பயன்படுத்தி தனியார் வேன்கள் ரூ.500 கட்டணம் வசூலித்து பயணிகளை ஏற்றிச் சென்றனர். விதிமுறைப்படி வேன்களில் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடாது. இருப்பினும் ஆரப்பாளையத்திலிருந்து தனியார் வேன்களில் இரவு முழுவதும் பயணிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர்.



# மெட்ரோ ரயில்களில் மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் இருக்கை ஒதுக்கீடு குறித்து ஆய்வு: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜன.20-

மெட்ரோ ரயில்களில் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு இருக்கைகள் ஒதுக்கீடு, முறையாக அமல்படுத்தப்படுகிறதா என திடீர் சோதனைகள் நடத்த, மெட்ரோ ரயில் நிர்வாகத்திற்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில்களில், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருக்கைகள் ஒதுக்கீடு செய்யக் கோரி, வழக்கறிஞர் வி.பி.ஆர்.மேனன் என்பவர் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு வழக்கு, தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, மெட்ரோ ரயில் தரப்பில், ஒவ்வொரு பெட்டியிலும் மொத்தமுள்ள 50 இருக்கைகளில் 14 இருக்கைகள் மூத்த குடிமக்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இருக்கைகளின் அருகில் மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் என எழுதி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பில், தனியாக இருக்கைகள் ஒதுக்கியிருந்தாலும், அந்த இருக்கைகளில் அமர்ந்திருப்பவர்கள் எவரும், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் வந்தால் எழுந்து இடம் வழங்குவதில்லை. அதனால், பெண்களுக்கு என தனி பெட்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளதைப் போல, மெட்ரோ ரயில்களில் மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு தனி பெட்டிகள் ஒதுக்கீடு செய்யலாம் என யோசனை தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், தனி பெட்டி ஒதுக்கீடு செய்வது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் தான் முடிவு செய்ய வேண்டும். அதனால், மனுதாரரின் இந்த கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும் என மெட்ரோ ரயில் நிர்வாகத்துக்கு உத்தரவிட்டனர்.

மேலும், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு இருக்கைகள் ஒதுக்கீடு முறையாக அமல்படுத்தப்படுகிறதா என அவ்வப்போதைக்கு திடீர் சோதனைகள் நடத்த வேண்டும் எனவும், இருக்கைகள் ஒதுக்கீட்டை முறையாக அமல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை 30 நாட்களில் வகுக்க வேண்டும் எனவும் மெட்ரோ ரயில் நிர்வாகத்துக்கு உத்தரவிட்டனர்.

மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர்ந்திருப்பவர்கள், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளி பயணிகளுக்கு விட்டுத்தர மறுக்கும்பட்சத்தில், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கை முடித்து வைத்தனர்.

# ஐ.நா. சபைக்கு மாற்றாக புதிய அமைப்பை தொடங்கிய ட்ரம்ப்: ரூ.9,000 கோடி செலுத்தி நிரந்தர உறுப்பினராக அழைப்பு

புதுடெல்லி, ஜன.20-

ஐ.நா. சபைக்கு மாற்றாக "போர்டு ஆப் பீஸ்" என்ற புதிய சர்வதேச அமைப்பை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தொடங்கி உள்ளார். இந்த புதிய அமைப்பில் ரூ.9,000 கோடி கட்டணம் செலுத்தி உறுப்பினராக சேரலாம் என்று அதிபர் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.



கடந்த 2023ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரை இஸ்ரேல் ராணுவத்துக்கும் பாலஸ்தீனத்தின் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் அமைப்புக்கும் இடையே போர் நடைபெற்றது. அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் முயற்சியால் கடந்த ஆண்டு அக்டோபரில் இஸ்ரேல், ஹமாஸ் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

போரால் பாதிக்கப்பட்ட காசா நகரை மறுசீரமைப்பு செய்யும் பணிகளுக்காக கடந்த ஆண்டு நவம்பரில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் ஐ.நா. சபை பயனற்றது என்று அதிபர் ட்ரம்ப் தொடர்ந்து விமர்சித்து வந்தார். இந்த சூழலில் ஐ.நா. சபைக்கு மாற்றாக "போர்டு ஆப் பீஸ்" என்ற புதிய சர்வதேச அமைப்பை அவர் தொடங்கி உள்ளார்.

புதிய அமைப்பின் தலைவராக அதிபர் ட்ரம்ப் பொறுப்பேற்று உள்ளார். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப், அதிபர் ட்ரம்பின் மருமகன் ஜெராட் குஷ்னர், பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் டோனி பிளேர், அப்போலோ குளோபல் நிறுவன தலைமை செயல் அதிகாரி மார்க் ரோவன், இந்திய வம்சாவளியை சேர்ந்த உலக வங்கி தலைவர் அஜய் பங்கா, அமெரிக்க தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் ராபர்ட் கேப்ரியேல் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.

புதிய சர்வதேச அமைப்பில் உலக நாடுகள் நிரந்தர உறுப்பினராக சேரலாம். இதற்கு தலா ரூ.9,000 கோடி கட்டணம் செலுத்த வேண்டும் என்று அதிபர் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார். இந்த புதிய அமைப்பு காசாவின் மறுசீரமைப்பு பணிகளில் ஈடுபடும். இந்தியா, பாகிஸ்தான் உட்பட பல்வேறு நாடுகள் "போர்டு ஆப் பீஸ்" அமைப்பில் சேர அழைப்பு விடுக்கப்பட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து ஐ.நா. சபையின் மூத்த அதிகாரி டேனியல் போர்டி கூறும்போது, "உலக விவகாரங்களில் தலையிட அமெரிக்கா விரும்புகிறது. இதற்காக புதிய அமைப்பு உருவாக்கப்பட்டு உள்ளது. இது குறுக்கு வழி" என்று குற்றம் சாட்டினார்.

# பாஜக தேசியத் தலைவர் தேர்தல்: நிதின் நபின் இன்று வேட்புமனு தாக்கல்!



புதுடெல்லி, ஜன.20-

பாரதிய ஜனதா கட்சியின் தேசியத் தலைவர் பதவிக்கு, அக்கட்சியின் தற்போதைய செயல் தலைவரான நிதின் நபின் இன்று வேட்புமனு தாக்கல் செய்கிறார். பாஜகவின் மூத்த தலைவர்கள், மாநில முதல்வர்கள் முன்னிலையில் இன்று பிற்பகல் அவர் வேட்புமனு தாககல் செய்ய உள்ளார்.

டெல்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் இன்று பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்ய நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இன்று மாலை 4 மணி முதல் 5 மணி வரை வேட்புமனுக்கள் பரிசீலிக்கப்படும். இதனைத் தொடர்ந்து, இன்று மாலை 5 மணி முதல் 6 மணி வரை வேட்புமனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். மாலை 6.30 மணிக்குப் பிறகு, வேட்புமனு தாக்கல் செய்தவர்கள் குறித்த விவரங்களை தேசிய தேர்தல் அதிகாரி பத்திரிகைகளுக்குத் தெரிவிப்பார்.

இந்த தேர்தலில் வாக்காளர்களாக கட்சியின் தேசிய மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் இருப்பார்கள். வேட்புமனு தாக்கல் செய்பவர் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் கட்சியின் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும். வேட்புமனு தாக்கல் செய்பவரை வாக்காளர்களில் குறைந்தது 20 பேர் கூட்டாக முன்மொழிய வேண்டும். போட்டி இருக்கும் பட்சத்தில் நாளை (ஜன. 20) வாக்குப்பதிவு நடைபெறும். கட்சியின் புதிய தலைவர் நாளை முறைப்படி அறிவிக்கப்படுவார்.

இந்த தேர்தலில், நிதின் நபின் போட்டியின்றி தேர்வு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதின் நபின் இன்று வேட்புமனு தாக்கல் செய்ய உள்ள நிலையில், அவரை முன்மொழியவும் அவருக்கான தங்கள் ஆதரவை வெளிப்படுத்தவும் கட்சியின் மூத்த தலைவர்கள், பாஜக ஆளும் மாநில முதல்வர்கள், மாநில தலைவர்கள் உள்ளிட்டோர் இன்று டெல்லியில் கூடுகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாஜக தேசிய தலைவர் ஜே.பி. நட்டா உள்ளிட்ட உயர் மட்டத் தலைவர்களின் ஆதரவுடன் நிதின் நபின் கட்சியின் 12வது தேசியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய தலைவர் தேர்தல் காரணமாக டெல்லியில் உள்ள பாஜக தலைமையகம் பரபரப்பாக இயங்கி வருகிறது. இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் நடைபெற உள்ள முக்கிய தேர்தல்களுக்கு கட்சி தயாராகி வரும் நிலையில், நிதின் நபினின் தேர்வு முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. தற்போது நிதின் நபினுக்கு 45 வயதாகிறது. இவர், தேசிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டால், அப்பதவியை இளம் வயதில் வகிக்கும் முதல் தலைவர் என்ற பெருமை அவருக்கு கிடைக்கும்.

பாஜக தேசியத் தலைவர் பதவிக்காலம் ஜனவரி 2029 வரை நீடிக்கும். இருப்பினும் 2029 மக்களவை தேர்தலுக்காக இது நீட்டிக்கப்பட வாய்ப்புள்ளது. 45 வயதான நிதின் நபின் தற்போது பிஹாரின் சாலை கட்டுமானத் துறை அமைச்சராக உள்ளார்.

அவர் 2006, 2010, 2015, 2020, 2025 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து 5 முறை பாங்கிபூர் தொகுதியிலிருந்து சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரது தந்தை நவீன் கிஷோர் சின்ஹாவும் ஒரு மூத்த பாஜக தலைவர் ஆவார். நிதின் நபினுக்கு பாஜகவின் தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் அமைப்பும் ஆதரவு அளித்துள்ளதாக கருதப்படுகிறது.

பாஜக தேசிய தலைவராக மத்திய அமைச்சரான ஜே.பி.நட்டா உள்ளார். இவரது பதவிக் காலம் முடிந்த பிறகு 2024 மக்களவைத் தேர்தலுக்காக நீட்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## பெரம்பலூர் சங்குபேட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் சிறப்பு பூஜை


பெரம்பலூர் ஜன.20-.

பெரம்பலூர் டவுன் சங்குபேட்டையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருகோயில் தை மாதத்தில் வரும் அமாவாசையை யொட்டி, அம்மனுக்கு பால், தயிர், தேன், இளநீர், சந்தனம், மஞ்சள், திருமஞ்சனம், ஜவ்வாது, பன்னீர் உள்ளிட்ட வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து, பூஜைகளுடன் மஹா தீபாராதனைகள் செய்து, பெண்கள், மகளிர்குழுவினர் மற்றும் பொதுமக்கள் வழிபட்டனர். பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கினர். உலக நன்மைக்காகவும், பருவ மழை தவறாமல் பெய்து, தன தானியம் பெருகிடவும், பொதுமக்கள் நோய் நொடி இல்லாமல் இருக்க வேண்டும் என பொதுமக்கள் பிரார்த்தனை செய்தனர். 19 வார்டு அன்னதான குழுவினர் ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு அபிஷேக பொருட்கள், மற்றும் அன்னதானம் ஏற்பாடு செய்திருந்தனர். மாதம் தோறும் வரும் அம்மாவாசை, பௌர்ணமி நாட்களில் தொடர்ந்து அன்னதானம் நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடதக்கது.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை சங்கு பேட்டை 19 வது வார்டு அன்னதான குழுவினர் முன்னின்று நடத்தி வருகிறர்கள். விழாவில் கோயில் பூசாரி நீதிதேவன், கோயில் நிர்வாகி கண்ணபிரான், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் கொடைக்கானலில் நகராட்சி ஊராட்சிகளில் நடக்கும் விதிமீறல்கள்

திண்டுக்கல், ஜன.20-



ஆங்காங்கே நடைபெறும் அரசு நிலங்கள் ஆக்கிறமைப்பு, கொடைக்கானலில் தடை செய்யப்பட்ட கனரக வாகனங்கள் இயக்கப்படுவது, பாறைகளை வெடிவைத்து தகர்ப்பது, நெடுஞ் சாலை ஆக்கிரமைப்பு, முறையான வாகன நிறுத்தம், கழிப்பறை வசதி இல்லாமல் இருப்பது, ஆங்காங்கே காலை ஆறு மணிமுதல் இரவு பத்து மணிவரை தடை இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக விற்கப்படும் மது மற்றும் போதை காளான், அனுமதி இல்லாமலும், வாகன நிறுத்த வசதி இல்லாமலும் கொடைக்கானல் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இயங்கும் தங்கும் விடுதிகள், மேலும் வரைமுறை தாண்டிய கட்டிடங்கள் என மக்கள் விரோத செயல்கள் நடக்கும் அவல நிலை. மக்களை பாதுகாக்க வேண்டிய துறைகள் ஏதும் செயல்படாத நிலை? இனியாவது விழிக்குமா நகராட்சி, சுற்றுலாத்துறை, வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட நிர்வாகம் என மன வேதனையில் கொடைக்கானல் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கை



■ தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் தை அமாவாசை முன்னிட்டு அருள்மிகு சங்கரகோமதி சமேத சங்கரலிங்க சுவாமி வீதி உலா புறப்பாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது.



## தென்காசி மாவட்ட ஆட்சியர் கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்

தென்காசி, ஜன.20-

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 386 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து, கணிணி அறிவியல் தொழில்நுட்பப் பிரிவில் பயிலும் கல்லூரி மாணவன் குருராஜ் அவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50.000/ க்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) நம்பிராயர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முத்துராமலிங்கம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அரசு மீது முழு நம்பிக்கை உடன் தங்களது வாழ்விடங்களை காலி செய்த மக்களுக்கும் பட்டா கோரி மமக மனு

தென்காசி, ஜன.20-





தென்காசி மாவட்டம் மற்றும் நகராட்சிக்கு உட்பட்ட மூன்றாவது வார்டு பகுதியில் சாலை ஓரங்களில் குடிசை அமைத்து பல ஆண்டுகளாக வசித்து வந்த மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க கோரி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் நகர தலைவர் அபாபில் மைதீன் தலைமையில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

இது தொடர்பாக அளித்துள்ள மனுவில் தெரிவித்துள்ளதாவது : தென்காசி மூன்றாவது வார்டு பகுதியில் பல ஆண்டுகளாக சாலை ஓரங்களில் குடிசை அமைத்து வசித்து வந்த பல ஏழை எளிய குடும்பங்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த மழையின் காரணமாக கடுமையான பாதிப்புக்கு உள்ளாகினர். அது சமயம் பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக அங்கு வசித்து வந்த மக்களை அரசு சார்பில் அப்புறப்படுத்தி சமுதாய நலக்கூடத்தில் தங்க வைக்கப்பட்டினர். அப்போது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள் மேற்படி மக்களை நேரில் சந்தித்தபோது உங்களுக்கு நிரந்தரமாக இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்படும் என உறுதியளித்தார். அதனைத் தொடர்ந்து அரசு மூலம் ஏற்பாடு செய்த தரப்படும் என மக்கள் அங்கு இருந்த இடங்களை நம்பிக்கையுடன் காலி செய்தனர். அதன் பின்னர் அவர்கள் வசித்து வந்த வீடுகளை சாலை விரிவாக்கம் என்ற பெயரில் அரசு அதிகாரிகளால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.

எனவே அரசு மீது முழு நம்பிக்கை உடன் தங்களது வாழ்விடங்களை காலி செய்து வழங்கிய அனைத்து மக்களுக்கும் பட்டா குறிச்சி பகுதியில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை மனுவினை ஆட்சியரிடம் அளித்துள்ளனர்.

இந்நிகழ்வில் மமக மாவட்ட தலைவர் நயினார் முகம்மது, மமக மாவட்ட செயலாளரும் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் சலீம்,மாநில தொண்டர் அணி செயலாளர் கோகோ சையத் அலி மாவட்ட தொண்டர் அணி பொருளாளர் ஹபிப் ரகுமான், நகரத் துணைச் செயலாளர் அப்துல் ரஹீம், 5 வது வார்டு நிர்வாகிகள் திவான், செயலாளர் திவான் முகமது அலி, சாகுல் ஹமீது, சித்திக், 22 வது வார்டு செயலாளர் பீர்முகமது மற்றும் திரளான ஆண்கள் பெண்கள் என பலர் கலந்து கொண்டனர்.



## கோ. மருதப்புரம் சலவை தொழிலாளருக்கு வழங்கப்பட்ட இடம் தனி நபர் ஆக்கிரமிப்பு ஆட்சியரிடம் புகார் மனு

தென்காசி : ஜன 20-

தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் சலவை தொழிலாளருக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டு மனை இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ள தனி நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி தென்காசி மாவட்ட சலவை தொழிலாளர் சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

இது தொடர்பாக தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அளிக்கப்பட்ட மனுவில் தெரிவித்துள்ளதாவது,தென்காசி மாவட்ட சலவை தொழிலாளர் சங்கத்தில் மாவட்ட செயலாளராக உள்ள குழந்தை வள்ளுவன் என்பவருக்கு சங்கரன்கோவில் தாலுகா கோ. மருதப்பபுரம் கிராமத்தில் பட்டா எண் 700 ல் தனிப்பட்டாவாக தமிழ்நாடு அரசின் பிற்பட்டோர் நலத்துறையின் சார்பில் வழங்கப்பட்டுள்ள இடத்தில் சிறிய குடிசை அமைத்து தற்காலிமாக வசித்து வருகிறேன் என்றும்,மேற்படி இடத்தில் முத்துகிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த ராஜலட்சுமி என்பவர் தனது அதிகார பலத்தாலும் பண பலத்தாலும் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து கல் ஊன்றி கம்பி வேலி போட்டு வைத்துள்ளார். அதனால் தனது வீட்டிற்கு செல்வதற்கு வழியில்லை என்றும் இது தொடர்பாக மேற்படி நபர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிகிறது. அது குறித்த தற்போதைய நிலை தனக்கு என்னவென்று தெரியவில்லை என்றும் சலவை தொழிலாளர் சமுதாயத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள மேற்படி நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளனர். இந்நிகழ்வில்தென்காசி மாவட்ட சலவைத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் கோவிந்தன் மாவட்ட செயலாளர் குழந்தை வள்ளுவன் மாவட்ட பொருளாளர் சுப்பையா மாநில கவுரவ தலைவர் சாமி மற்றும் சமுதாய பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



## இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் திருப்பூரின் மாநகர மாவட்ட தலைவராக கோபால்சாமி நியமனம்

அவிநாசி ஜன 20-

அதனைத் தொடர்ந்து அவர் அவிநாசி சாலையில் உள்ள காமராஜர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி, பின்பு ரயில் நிலையம் அருகே உள்ள குமரன் பூங்காவில் அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, மாநகராட்சி அருகே உள்ள தேசத்தந்தை காந்தி அவர்களின் திருவருவு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர் ஆர் கிருஷ்ணன் மற்றும் மாநகர மாவட்ட நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் பெரும் திரளாக இதில் பங்கேற்றனர். புதிய மாவட்ட தலைவருக்கு கழக நிர்வாகிகள் தங்களது வாழ்த்துக்களை தெரி வித்தனர்

## 2021 தேர்தலில் அளிக்கப்பட்ட 505 வாக்குறுதிகளில் 401ஐ திமுக அரசு நிறைவேற்றியுள்ளது: கனிமொழி பேச்சு

சென்னை, ஜன.20-



2021 தேர்தலில் அளிக்கப்பட்ட 505 வாக்குறுதிகளில் 401 ஐ திமுக அரசு நிறைவேற்றியுள்ளது என திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி தெரிவித்துள்ளார். 101 வாக்குறுதிகளை நிறைவேற்றாததற்கு காரணம் ஒன்றிய அரசு தமிழகத்திற்கு தர வேண்டிய நிதியை தராததுதான். ஒன்றிய அரசு நிதி கொடுக்காமல் வஞ்சித்தாலும் அதனை எப்படி கையாள வேண்டும் என திமுக அரசுக்கு தெரியும் என கனிமொழி தெரிவித்தார்.



■ திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஊராட்சி ஒன்றியம் நாமநாயக்கன்பட்டி ஊராட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.



## முத்துகவுண்டன்பாளையம் 2 வருடங்களாக கிடப்பில் போடப்பட்ட கோரிக்கை மனு

### பஞ்சாயத்தில் பணம் இல்லை PDOவின் பதில்

ஈரோடு, ஜன.20-

ஈரோடு, மொடக்குறிச்சி தாலுக்கா சின்னியம்பாளையம் ஊராட்சி, முத்துகவுண்டன் பாளையம் (பஞ்சாயத்து), N.P.S. நகரில் சுமார் 200 வீடுகள் உள்ளது. இங்கு கழிவுநீர் வடிகால் வசதி இல்லாமல், அவரவர் வீட்டின் முன் உறுஞ்சுகுழி அமைத்திருந்தாலும், மலை போன்ற பாறைகள் உள்ளதால் கழிவுநீர் மண்ணுக்குள் செல்லாமல் வெளியேறி சாலைகள் மற்றும் மண் சாலையில் தேங்குவதால் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். மழை காலங்களில் கழிவுநீர் வீட்டின் வாசலில் தேங்கி வரும் நிலையில், அந்த சுகாதாரமற்ற நீரை மிதித்து வர வேண்டிய சூழல் உள்ளது.

இதுகுறித்து முத்து கவுண்டன் பாளையம் பிடிஓ திருநாவுக்கரசு அவர்களை தொடர்பு கொண்ட பொழுது கூறியதாவது: புது கவுண்டம்பாளையம் பஞ்சாயத்தில் பணம் இல்லை எனவும், இது போன்ற வேலைகளை செய்வதற்கு பணம் எதுவும் ஒதுக்கீடு செய்யவில்லை எனவும், பணம் வந்தால் தான் இதனை நாங்கள் சரி செய்ய முடியும் என்றும் கூறினார்.

இதை பஞ்சாயத்தில் மற்றும் PDO இடம் கழிவுநீர் வடிகால் வசதி ஏற்படுத்தி தர மனு கொடுத்து இரண்டு வருடம் ஆகியும் எந்த நடவடிக்கையும் இல்லை. மேலும் இந்த பகுதியில் கழிவுநீர் வடிகால் அமைக்க இந்த இடத்தை வீட்டு மனைகளாக பிரித்து விற்றவர்கள் பஞ் சாயத்தில் வடிகாலுக்கு பணம் செலுத்தி உள்ளதாக ஒரு தகவலும் உள்ளது. இதனால் கொசுக்கடி சுகாதாரமற்ற போக்கு ஆகியவை நிகழ்வதால், சொல்லொண்ணா துயரத்தில் இருப்பதாக இப்பகுதிவாழ் மக்கள் வேதனை அடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். தகுந்த நடவடிக்கை எடுத்து பகுதியில் கழிவுநீர் வடிகால் கால்வாய் அமைத்து தருமாறு அப்பதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கேட்டுக் கொண்டுள்ளனர்

## சபரிமலை விமான நிலையத்திற்கு தேர்வுசெய்த நிலம் தனியாருக்கு சொந்தமானது என உறுதிபடுத்தியது கேரள நீதிமன்றம்!

திருவனந்தபுரம், ஜன.20-

சபரிமலை விமான நிலையத்திற்கு தேர்வுசெய்த நிலம் தனியாருக்கு சொந்தமானது என கேரள நீதிமன்றம் உறுதிபடுத்தியது. எருமேலியில் உள்ள 2,263 ஏக்கர் செருவேலி எஸ்டேட் வழக்கில் கேரள அரசுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. 2005ல் ஹாரிசன் மலையாளம் எஸ்டேட் நிர்வாகம் நிலத்தை விற்றதை எதிர்த்து கேரள அரசு தொடுத்த வழக்கில் தீர்ப்பு அளித்துள்ளது

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000